# மாதவரத்தில் மெட்ரோ ரயில் திட்ட பணி விரைவில் துவக்கம்

**மாதவரம், ஜூன் 25–**

மாதவரத்தில் மெட்ரோ ரயில் திட்டப்பணி விரைவில் துவக்கப்பட உள்ளதால், அதற்கான சாலை தடுப்பு பொருட்கள் உள்ளிட்டவை இறக்குமதி செய்யப்பட்டு உள்ளன.

சென்னை மெட்ரோ ரயில், இரண்டாவது திட்டம், 79 ஆயிரத்து, 961 கோடி ரூபாய் செலவில், மூன்று வழித்தடங்களில், 107.55 கி.மீ., பாதை அமைக்கப்பட உள்ளது.

## ஆயத்த பணி

அந்த பாதைகள், மாதவரம் – சிறுசேரி சிப்காட் இடையே, 45.81 கி.மீ., துாரமும், மற்றொரு பாதை, மாதவரம் – சோழிங்கநல்லுார் இடையே, 44.62 கி.மீ., துாரமும், கோயம்பேடு – கலங்கரை விளக்கம் இடையே, 17.12 கி.மீ., துாரமும் அமைக்கப்பட உள்ளன.




■ மாதவரம் பால்பண்ணையில், மெட்ரோ ரயில் திட்டப்பணிக்காக கொண்டு வரப்பட்டுள்ள சாலை தடுப்புகள்.

இந்த பாதைகளில், 930 மீட்டர் இடைவெளியில், 116 நிலையங்கள் கட்டப்பட உள்ளன.

இதையடுத்து, தற்போது, மெட்ரோ ரயில் திட்டத்திற்கு தேவையான நிலம் கையகப்படுத்தும் பணி துரிதப்படுத்தப்பட்டு உள்ளன.

மாதவரம், பால்பண்ணையில் உள்ள, அலங்காரம் மற்றும் செயல் விளக்க பூங்கா அருகில் இருந்து, மெட்ரோ ரயில் திட்டப் பணி, அடுத்த சில தினங்களில் துவங்கப்பட உள்ளது.

அதற்காக, சாலையில் அமைக்கப்படும் தடுப்புகள், பூங்கா அருகே இறக்குமதி செய்யப்பட்டு உள்ளன. ஊழியர்களும் அங்கு முகாமிட்டு, பல்வேறு ஆயத்த பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இங்கு மெட்ரோ ரயில் பணிகள் துவங்கப்பட்டதும் மணலி, மாதவரம் இடையிலான வழக்கமான போக்குவரத்தில் மாற்றங்கள் செய்யப்படும்.

மேற்கண்ட மூன்று பாதைகளிலும், ரயில் போக்குவரத்து துவங்கும் போது, சென்னையின் வாகன போக்குவரத்து நெருக்கடி, 20 சதவீதம் குறைய வாய்ப்புள்ளது.

பொதுவாக, மாதவரத்தில் இருந்து பேருந்து மூலம் சிறுசேரிக்கு செல்ல, 2 மணி, 15 நிமிடங்கள் ஆகும். மெட்ரோ ரயில் மூலம் பயணித்தால், 1 மணி நேரம் முன்னதாக செல்ல முடியும்.

அதே போன்று, மாதவரத்தில் இருந்து சோழிங்கநல்லுாருக்கு பேருந்தில் செல்ல, 2 மணி நேரம் ஆகும். மெட்ரோ ரயிலில் பயணித்தால், 1 மணி, 10 நிமிடங்களில் சென்றுவிடலாம்.

## வளர்ச்சி

கோயம்பேட்டில் இருந்து கலங்கரை விளக்கத்திற்கு செல்ல, 45 நிமிடங்கள் ஆகும் நிலையில், மெட்ரோ ரயிலில், 25 நிமிடங்களில் செல்ல முடியும்.

மெட்ரோ ரயில் திட்டத்தால், திருவள்ளூர் மாவட்ட எல்லையில் இருக்கும் சென்னை மாநகராட்சி பகுதியான மாதவரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வேகமான வளர்ச்சி அடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை நேரு பூங்கா – சென்ட்ரல் மற்றும் சின்னமலை – தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., இடையே, மே, 25ல், மெட்ரோ ரயில் போக்குவரத்து துவங்கியது குறிப்பிடத்தக்கது.